கிறார்கள் என்று சொன்னால், எங்கு பார்த்தாலும் இரவில் பார்த்தால் இரயிலடியில், அல்லது சினிமா கொட்டகைகளில் இந்த அரசு ஜீப்கள் நிற்கின்றன. இதையெல்லாம் பார்க்கிறபோது, அதிலே யார் போகிறார்கள் என்று பார்த்தால் சம்பந்தமில்லாதவர்கள், அரசாங்க ஜீப்களில் போகிறார்கள். இதை நான் குறையாகக் கூறவில்லை. இதை அரசாங்கம் கண்காணித்துக் கொண்டு இருக்க முடியாது ; நான் சொல்லுவது, இதில் ஓரளவு அதிகமாகச் செலவாவதைக் குறைக்கவேண்டும் என்று சொன்னால், ஜீப்களை பயன்படுத்தாத அளவிலே, சில அரசாங்க அதிகாரிகளிடத்தில் ஜீப்கள் இருக்கின்றன. அவைகளை மாற்றிக் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும். சில அதிகாரிகளுக்கு ஜீப்கள் வாங்குவதற்காக பணத்தை ஒதுக்கிக் கொண்டு இதை அவர்களிடம் **encourage** பண்ணுவது அவ்வளவு உசிதம் அல்ல. தீவிரமாக ஆலோசித்து இதையெல்லாம் குறைக்கவேண்டும். கண்ட இடங்களில் சர்க்கார் ஜீப்களைப் பார்க்கிற காரணத்தினால் இதை நான் சொல்லுகிறேன்.

அடுத்து, சாலைப் போக்குவரத்துக்காக ரூபாய் 1,23,85,900 ஒதுக்கி இருக்கிறார்கள். நான் இது சம்பந்தமாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் பரங்கிப்பேட்டை ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் அதிகமாக இருந்த இடம். அந்த பரங்கிப்பேட்டைக்குப் பக்கத்தில் வெள்ளாற்றிலிருந்து, சிதம்பரம் பக்கத்தில் இருக்கிற கொள்ளிடம் வரை 20 ஆயிரம் எக்கர் நிலங்கள் இருக்கின்றன. பரங்கிப்பேட்டையில் இருப்பவர்களுக்கு 10 ஆயிரம் எக்கர் நிலங்கள் இருக்கின்றன. இந்த 10 ஆயிரம் எக்கர் நிலமும் விவசாயம் செய்யப்பட வேண்டுமானால் பரங்கிப்பேட்டையிலிருந்து, புவனகிரி, கிள்ளை வழியாக 16 மைல்கள் கடந்து வரவேண்டியிருக்கிறது. நேராக ஆற்றைக் கடந்து சென்றால் 7 மைல் ஆகிறது. அங்கே கிள்ளையில் 10 ஆயிரம் மீனவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் பிடிக்கிற மீன்களையெல்லாம் பரங்கிப் பேட்டைக்கு எடுத்து வந்து வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் படகில் வரவேண்டியிருக்கிறது. பரங்கிப்பேட்டையில் உள்ளவர்கள் தங்கள் நிலங்களுக்கு வேண்டிய விதை, எரு எடுத்துப் போகவேண்டுமானால் இந்த 16 மைல்கள் கடந்து போகவேண்டியிருக்கிறது. இதற்குப் பதில் பரங்கிப்பேட்டை தோணித்துறை மத்தியில் 200 மீட்டர் அளவிற்கு ஒரு பாலம் கட்டினால் அவர்கள் நேராகப் போய்வர சரியாக இருக்கும் என்று அந்த விவசாயிகள் விரும்புகிறார்கள். பரங்கிப்பேட்டையில் ''Biological'' ஸ்டேஷன் ஏற்பட்டு இருககிறது. சிதம்பரத்திலிருந்து ''Biological'' ஸ்டேஷன் வருவதற்கு 7மைல் நேராக வராமல் இப்போது சுற்றிக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. பாலம் கட்டினால் நேராகக் கடந்து வந்து விடலாம். ஆகவே அந்தப் பாலம் மிகவும் அவசியமானது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4.00 p.m. tomorrow.

-05 .m The House then adjourned.

V. PAPERS LAIED ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

' Nil '

B. Reports, Notifications and Other Papers.

* 58. A Review on the Nationalized Transport in Tamil Nadu (English and Tamil).

*59. A Review on Labour in Tamil Nadu 1968-69 (English and Tamil).

26th March 1969]

* 60. A Review of the Progress made in Co-operative Development Schemes, 1968–69 (English and Tamil).

* 61. A Review on the Progress made in the Handloom Industry (English).

* 62. Policy Note on Co-operative Banking at Block level.

* 63. Fifth Report of the Committee on Estimates 1968–69 (Fourth Assembly) relating to Harijan Welfare Department.

* 64. Note of the Agriculture Department with reference to the recommendation of the Public Accounts Committee in regard to the supply of bamboos to a paper mill.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS